நல்லூர் ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5-00

முரசு 06 ஒலி 75 ஆங்கீரச வைகாசி 07 (20.05.1992) புதன்


★ அரசினால் குடியேற்றப்பட்டவர்கள்

## கிழக்கு குடியேற்றங்களிலிருந்து வெளியேற வேடர் விருப்பம்

கிழக்கில் மகாவலி சி வலயத்தில் அரசினால் பலவந்தமாக குடியேற்றப்பட்ட வேடர் இனத்தவர்கள் அங்கிருந்து வெளியேறி தமது முன்னைய இடங்களுக்கு செல்ல அனுமதிக்குமாறு கோரிக்கை எழுப்பியுள்ளனர். அவர்கள் தம்மை இந்த குடியேற்றியமைக்காக மகாவலி அமைச்சர் காமினி அத்துக்கோரளையிடம் தமது ஆட்சேபத்தையும் நேரில் தெரிவித்துள்ளனர் 2500 வருடங்களுக்கு மேலாக காடுகளில் வாழ்ந்து பழக்கப்பட்ட எம்மை பலவந்தமாக மகாவலி குடியேற்றங்களில் குடியிருக்கச் செய்தமை எம் வாழ்க்கை முறையையே பாதித்துள்ளது என வேடர் பிரதிநிதிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர். அமைச்சரை சந்திக்க கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட இரு வேடர் பிரதிநிதிகளும் தமது —04 ஆம் பக்கம் பார்க்க

## தடையை செயற்படுத்த விசாரணை மன்றம்

விடுதலைப் புலிகள் மீதான இந்திய அரசு விதித்த தடையை செயற்படுத்த விசாரணை மன்றம் அமைக்கப்படும் என இந்திய உள்துறை இணையமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

நேற்று திருவனந்தபுரத்தில் செய்தியாளரிடையே பேசிய அவர் இலங்கை அகதிகளின் நடமாட்டம் இந்தியாவில் கண்காணிக்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

★ சேவை நீடிப்புக்கு

## யாழ் கல்விப்பணிப்பாளருக்கு அமைச்சரவை அனுமதி தேவை

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் மீளவும் சேவையில் சேர்த்துக்கொள்வது தொடர்பாக அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்காக கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இவருக்கு 60 வயது முடிவடைந்துள்ளமையால் இவரது நியமனத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கவேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

இவரைப்போல வேறு பிரதேசங்களின் கல்விப்பணிப்பாளர்களின் சேவை நீடிப்புக்கும் அமைச்சரவையின் அனுமதியைக் கல்வியமைச்சு பெறவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

# இந். காங்கிரஸ் கட்சியினுள் அதிகாரப் போட்டி ஆரம்பம்

### அர்ஜுன்சிங் - நரசிம்மராவ் மோதல்

இந்திரா காங்கிரஸ் கட்சியினுள் தற்போது அதிகாரப் போட்டி எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது, கட்சியினுள் பிரபலமாகிவரும் மனிதவளத்துறையமைச்சர் அர்ஜுன் சிங் இற்கு எதிராக பிரதமர் நரசிம்மராவ் எடுத்த நடவடிக்கைகள் இதை உறுதிப்படுத்துவதாக உள்ளது

இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழுவிற்கு உறுப்பினர்கள் கட்சி உறுப்பினர்களாலேயே தெரிவு செய்யப்படுவர். எனினும் அமைச்சர் அர்ஜுன் சிங்கை பிரதமர் ராவ் தெரிவுக்குழு உறுப்பினர்கள் பட்டியலில் சேர்க்காமல் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர் பட்டியலிலேயே சேர்த்துள்ளார்.

இது கட்சியினுள் பிரபலமாகிவரும் அர்ஜுன் சிங்கை தட்டிவைக்க பிரதமர் எடுத்த நடவடிக்கை எனக் கூறப்படுகிறது

அமைச்சர் சிங் தமக்கு பொருத்தமில்லாத துறைகள் குறித்து சம்பந்தமில்லாத வகையில் பொதுக்கூட்டங்களில் பேசி தமக்கென தனியான அதிகார பலத்தை கட்டியெழுப்புகிறார் எனவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

எனினும் அர்ஜுனின் தாம் தலைமைப் பதவிக்கு போட்டியிடவில்லை என மறுத்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட சமயம் அடுத்த பிரத — 4 ஆம் பக்கம் பார்க்க

● வற்றாப்பளை ஷெல்லில் காயமடைந்தவர் தகவல்

## சைக்கிள்களை எடுக்க முண்டியடித்தபோது இரு ஷெல்கள் அப்பகுதியில் வீழ்ந்தன

நேற்று முன்தினம் வற்றாப்பளை கண்ணகி ஆலயத்தில் பொங்கல் விழாவுக்கு சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அடியார்கள் திரண்டு நின்றனர்

அவ்வேளை இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை கோவிலை நோக்கி மேற்கொண்டனர் ஷெல்கள் நந்திக்கடல் பக்கமாக வீழ்ந்து வெடித்தன

இதனால் அடியார்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர் சிலர் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தமது சைக்கிள்களை எடுப்பதற்கு முண்டியடித்த வேளை இவ்விடத்தில் வந்து இரு ஷெல்கள் வீழ்ந்ததினால் பொதுமக்கள் பலர் உடல் சிதறி கொல்லப்பட்டிருந்ததை தான் நேரில் பார்த்ததாக யாழ். பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஓ. ஈஸ்வரன் என்பவர் தெரிவித்தார்

மற்றும் ஒரு ஷெல் ஆலயத்தின் முன்பக்கமாக வீழ்ந்து வெடித்ததாகவும் அவர் கூறினார்

இரவு குளிர்த்தி திருவிழாவுக்கு என பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்வாலயத்தில் திரண்டு நின்றதாகவும் நேற்று முன்தினம் தான் வைகாசி திருவிழா எனவும் கூறினார்

இறந்தவர்களின் உடல்களை செஞ்சிலுவை சங்க வாகனங்களில் முள்ளைத்தீவு அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 47

## ஷெல் தாக்குதல்

நேற்றும் நேற்று முன்தினமிரவும் ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள ... பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தினர். 18,50

## சயனைட் அருந்தி வீரச்சாவு

மட்டக்களப்பு குருமண்வெளியில் ட்ராக்டர் மற்றும் சைக்கிள்களில் வந்த படையினரும் தேசத்துரோகிகளும் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அருண்மணி (க. பிரேமச்சந்திரன் பொத்துவில்) சயனைட் அருந்தி வீரச்சாவு எய்தினர்.

மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் இரு புலிப்போராளிகளுக்கும் படையினருக்கும் இடையில் திடீரென ஏற்பட்ட மோதலில் 2 ஆம் லெப் புஷ்பமாறன் (சி. சந்திரன் வாழைச்சேனை), யோகிதகுமார் (க. மாணிக்கவாசகம் மயிலம்பாவெளி) ஆகியோர் வீரச்சாவு எய்தினர்.

# இலங்கையில் எய்ட்ஸ் நோய் தீவிரமாகப் பரவிவருகிறது

எய்ட்ஸ் நோய் பிரச்சினையை இலங்கை மக்கள் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என எய்ட்ஸ் நோய் எதிர்ப்புப் பேரணிக் குழு எச்சரித்துள்ளது.

இதுவரை எய்ட்ஸ் நோய் உள்ள ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அக்குழுவின் தலைவரான குணரத்தின தெரிவித்துள்ளார்

இந்நோய் பரவுவதற்கு காரணம் நீர்கொழும்புப் பகுதியில் அறுபத்தொன்பது ஆண் பெண் நோயாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் எய்ட்ஸ் நோய் பற்றிய பிரசார வேலைகள் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## பெண்கள் மூலம் 3 வர்த்தகர்கள் ஹீரோயின் கடத்தல்

கொழும்புக்கும் சென்னைக்கும் இடையில் பலகாலமாக நடைபெற்று வந்த ஹீரோயின் போதைப் பொருள் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொழும்பில் பொலிஸார் 5 லட்சம் பெறு...

## களுவாஞ்சிக்குடியில் இரு மாணவரே கைதாம்!

## வற்றாப்பளை ஷெல்லில்

யின் போதைப் பொருள் கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கடத்தலில் கொழும்பிலுள்ள மூன்று வர்த்தகர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் இவர்கள் பெண்கள் மூல

அண்மையில் கொழும்பில் பொலிஸார் 5 லட்சம் பெறுமதியான ஹீரோயினுடன் ஒரு பெண்ணைக் கைது செய்ததையடுத்து இது தெரியவந்துள்ளது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்க தடையை மீறி இந்தியாவுக்கு ரஷ்ய உதவி

இந்தியாவிற்கு ரொக்கட் தொழில்நுட்பத்தை ரஷ்யா வழங்க முன்வந்ததையடுத்து இரு நாடுகளுக்கும் எதிராக அமெரிக்கா ரொக்கட் தொழில்நுட்பத் தடையை விதித்தது.

எனினும் இத்தடைகளையும் மீறி இந்தியாவிற்கு ரஷ்ய ரொக்கட் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்று தொழில்நுட்ப உதவிகளை அளிக்க முன்வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இரு மாணவரே கைதாம்!

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்தபோது இரு மாணவர்களே கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இச்சம்பவத்தில் பத்து மாணவர்கள் காணாமல் போயுள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர். 06

# கூட்டுப்படை குண்டுவெடிப்பு இரு பெண்கள் கைது

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சோமாவதி இஸாக் அம்மா என்ற பெண்ணை பொலிஸார் கெக்கிறாவ-கந்தளை என்ற இடத்தில் வீடொன்றில் இருந்து கைது செய்தனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# வற்றாப்பளை ஷெல்லில் பலியான பொதுமக்கள்

நேற்று முன்தினம் வற்றாப்பளை அம்மன் கோயில் பகுதியில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்கு இலக்காகிப் பலியானவர்கள் விவரம் வருமாறு:

சண்முகலிங்கம்(45) முல்லைத்தீவு, க. சிதம்பரநாதன் (18) முள்ளியவளை, சுமனேந்திரன்(7) புதுக்குடியிருப்பு, வே. ஜெயராசா(14) இருமலை, த. ஸ்ரீஇந்திரராசா(34) புதுக்குடியிருப்பு, ச. நவரட்ணராஜா(38) செம்மலை, சிவம் (45) கனகராயன்குளம், கணேஷ்(30) வற்றாப்பளை, வதனி முத்தையன்கட்டு.

இவர்களுடன் ந. ஜீவரஞ்சனி என்ற குழந்தை மருத்துவமனையில் மரணமடைந்தது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு வெகுசிரமத்தின் மத்தியில் கொண்டுவரப்பட்டனர். (காயமடைந்தோர் விவரம் உள்ளே)

## [illegible] நடவடிக்கை

கோழித்தீன் உள்ளிட்ட கால்நடைத் தீனி வகைகளை கப்பல் மூலம் யாழ்ப்பாணத் திற்கு தருவிக்க நடவடிக்கை யெடுக்கப்படுவதாக செய்தி யொன்று தெரிவிக்கிறது.

கால்நடைத் தீனி வகை களை வடக்கிற்கு எடுத்துவர அத்தியாவசிய ஆணையாளர் அனுமதியளித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகி றது.

## சிறை அதிகாரியை மிரட்டியதால் ரைசனுக்கு தனிச் சிறை!

மானபங்கக் குற்றச்சாட்டின் பேரில் 6 வருடச் சிறை வாசம் அனுபவித்துவரும் முன்னாள் அதிபாரக் குத்துச் சண்டைச் சாம்பியன் மைக் ரைசன் சிறை அதிகாரி ஒருவரைப் பயமுறுத்தியதையடுத்து தனியறையில் இப்போது வைக்கப்பட்டுள்ளார்.

குத்துச்சண்டையில் கோடிக்கணக்கான டொலர்க ளைச் சம்பாதித்த ரைசன் சிறையில் செய்யும் வேலைக்கு மணி ஒன்றுக்கு 65 சதம் வீதம் பெறுகிறார்.

## கடனை மீளச்செலுத்த ஜூலை 31 வரை அவகாசம்

யாழ்ப்பாண வீடமைப்புத் திணைக்களத்திலிருந்து வீடு கட்டுவதற்கு, புனரமைப்பதற்கு முன்னர் கடன் பெற்றவர்கள் அதனை மீளச் செலுத்த வழங்கப்பட்ட தவணைக்காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக செய்தியொன்று தெரிவிக்கிறது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தேசிய வீடமைப்புத் திணைக்கள மாவட்ட முகாமையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வீடமைப்புக் கடன்களை யாழ் தேசிய வீடமைப்புத் திணைக்களத்திலிருந்து பெற்றவர்கள் அதனை மீளச்செலுத்த வழங்கப்பட்ட சலுகைக்காலம் எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. மீளச்செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் முதலும் வட்டியுமாக ஒரே தடவையில் செலுத்துவோருக்கு 10 சதவீத கழிவு வழங்கப்படும் அத்துடன் தவணை தப்பிய அறவீடுகளுக்கான தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[illegible] முன்னுரிமை வழங்கப்படும்.

இ) ஆங்கிலம் அல்லது சிங்களம் பேச, எழுத, வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும் (ரொக்கம், ஆதனம்)

உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்திற்கு கடமை புரிவதற்கான சம்மத பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்,

ஊ) விண்ணப்பப்படிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப்பத்திரம், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியனவற்றின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

17. 05. 1992.

05035

# இலங்கை மீது பொருளாதார தடை வேண்டும் — சுவாமி

"லிபியா போன்று இலங்கை மீதும் ஐ.நா.பொருளாதாரத் தடைகள் விதிக்க இந்தியா வழிகாண வேண்டும்" என்று முன்னாள் மத்திய அமைச்சரும், ஜனதாக்கட்சித் தலைவருமான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் இருக்கும் திராவிட இயக்கத் தலைவர்களை "நாம் மறந்து போனோமே" என்ற தர்மசங்கடத்தில் ஆழ்த்திய கோரிக்கை ஒன்றை மத்திய அரசின் முன்வைத்துப் பரபரப்பு ஏற்படுத்தியிருக்கிறார் சுப்பிரமணியசுவாமி. 'பெரியாருக்குப் பாரத ரத்னா விருது வழங்கப்படவேண்டும்...' என்பது அது!

## பெரியாருக்கு பாரத ரத்னா

"பெரியார் கருத்துக்களை ஏற்கிறேனோ இல்லையோ, அவர் மாபெரும் சமூக சீர்திருத்தவாதி என்பதை யாரும் மறுக்க முடியாது. பெரும் சிந்தனையாளர் அவர். அவருக்குப் பாரத ரத்னா விருது வழங்குவது அவசியமானது. நான் மத்திய உள்நாட்டு இலாகா அதிகாரிகளிடம் 'இதற்கு முன் இப்படிக் கோரிக்கை வந்திருக்கிறதா?' என்று விசாரித்தேன். ஃபைல்களைப் புரட்டி 'இல்லை' என்றார்கள். டெல்லியில் வி.பி.சிங் ஆட்சி நடந்தது. தி.மு.கழக மாறன் மத்திய அமைச்சராக இருந்தார். அப்போது பெரியாருக்கு இந்த மரியாதை செய்ய அவர் கூட நினைக்கவில்லை...' என்றார் சுவாமி.

தமிழ் நாட்டுக்கு அடிக்கடி வந்து குரல் கொடுக்கும் சுப்பிரமணிய சுவாமி முழு நேரம் இந்த மாநில அரசியலில் ஈடுபடும் எண்ணம் இருக்கிறதா?

"மாநில அளவிலான அரசியலில் எனக்கு ஈடுபாடு இடையாது. ஆனால் தமிழ் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காகப் போராடும் பிரதிநிதியாக நான் இருப்பேன். தமிழ் நாட்டின் தற்போதைய பிரச்சினையே அ.தி.மு.க.வுக்கு மாற்றான ஒரு கட்சி இல்லை என்பது. தி.மு.க. மதிப்பிழந்து விட்டது. அதன் தலைமையில் உள்ளவர்கள் இனி தேசவிரோதப் போக்கு உடையவர்கள்.

ஆகவே இனி தி.மு.க.வை நம்ப மக்கள் தயாராக இல்லை.

## தனித்தன்மை இல்லாத காங்கிரஸ்

தமிழ் நாட்டில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு ஆண்மை இடையாது. இங்குள்ள அதன் தலைவர்களுக்கு ஒரு தனித்தன்மை இல்லை. பர்சனாலிட்டி இல்லை. ஜெயலலிதாவுக்கு தலையாட்டுபவர்களாகவோ, வடக்கே உள்ள தங்கள் தலைமைக்குத் தலையாட்டுபவர்களாகவோ இருக்கிறார்கள். ஒரு புதிய கட்சி பலம் பெற வேண்டும். அது மாநிலக் கண்ணோட்டமுள்ள கட்சியாக இருக்கக்கூடாது. தேசியக் கண்ணோட்டமுள்ள கட்சியாக இருக்கவேண்டும். அதற்கு நான் முழு அளவில் முயற்சிக்கிறேன்..."

## ஜெயலலிதா செல்வாக்கு இவ்வளவுதானா?

ஜெயலலிதா ஆட்சி பற்றி அவர் கருத்து...?

'தமிழ் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் ஜெயலலிதா அரசு அக்கறை காட்டவில்லை. தமிழ்நாட்டுக்கு ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடு குறைந்துபோய் விட்டது. ஏரோனாட்டிக் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஆந்திராவில் தொடங்குகிறது. நான் மத்திய வர்த்தக அமைச்சராக இருந்தபோது தூத்துக்குடியை 'Free Port' ஆக அறிவித்தேன். அந்த பெருமையும் இப்போது கோவாவுக்குப்போய் விட்டது. இப்போதும் ஒரு தமிழர்தான் (ப.சிதம்பரம்) மத்தியில் வர்த்தக அமைச்சராக இருக்கிறார். தூத்துக்குடி Free Port திட்டம் கைவிட அனுமதித்திருக்கலாமா? டெல்லியில் ஜெயலலிதா செல்வாக்கு இவ்வளவுதானா?

தமிழ்நாட்டில் பத்திரிகைகள் மீது கெடுபிடி நடப்பது பற்றியும், சட்டசபை ஒரு நிருபருக்கு "பிடிவாரண்ட்" பிறப்பித்திருப்பது பற்றியும் அவர் சொன்னார்.

பத்திரிகையாளர்களும் தங்களைத் தாங்களே சற்று ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். தி.மு.க. அரசை நாங்கள் டிஸ்மிஸ் செய்த போது, எத்தனை பத்திரிகைகள் வரிந்து கட்டிக்கொண்டு எங்களுக்குக் கண்டனம் தெரிவித்தன! இப்போது சொல்லுங்கள் டிஸ்மிஸ் செய்தது தவறா?

ஆனால் அதெல்லாம் வேறு விஷயம். அதற்காக அரசாங்கம் தான் பத்திரிகைகளை ஒழுங்குபடுத்துகிறேன் பார்!" என்று கிளம்பக்கூடாது. அதை நான் ஆதரிக்க முடியாது. பத்திரிகைகளே தங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும்"

கடைசியாக-ஈழ மக்களைக் கவர பிரேமதாஸாவின் "திடீர் தம்பி பாசம்" பற்றி சுப்பிரமணியசுவாமி கடுமையாக விமர்சித்தார்.

"ராஜீவ் கொலையில் பிரேமதாஸவுக்கும் பங்கு இருக்கிறது. பிரபாகரனுக்கும் பிரேமதாஸா பணத்தை வாரிக் கொடுத்தார். கொழும்பில் நடந்த இராணுவ அணிவகுப்பில் ராஜீவ் காந்தி மீது துப்பாக்கியால் அடித்தானே ஒரு ஆள். அவனை விடுதலை செய்து பண உதவியும் அளித்தார் பிரேமதாஸ.

ஐ.நா.வில் போய் இந்தியா முறையிடவேண்டும். எப்படி பயங்கரவாத இயக்கத்தை வளர்க்கும் நாடாக லிபியா அறிவிக்கப்பட்டும் பொருளாதாரத் தடைகள் அதற்கு விதிக்கப்பட்டிருக்கிறதோ, அதுபோல இலங்கை மீதும் பொருளாதாரத் தடைகள் விதிக்க இந்தியா வழிகாண வேண்டும்..." -சுப்பிரமணிய சுவாமி அழுத்தமாகக் கூறினார்

நன்றி: ஜூனியர் விகடன்

## கடாபி தயாராம்

இத்தாலிய ஜனாதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்பதற்கு தான் தயாராக உள்ளதாக லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டிருக்கும் சிக்கலை கேலி செய்து, சுவாரஸ்யமாக மேற்கண்டவாறு கூறியுள்ளார் கடாபி.

## இன்று

இருபாலை அன்னை இந்திரா சனசமூக நிலையத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு பாலர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

## பாப்பரசரின் 72 ஆவதுபிறந்ததினம்

பாப்பரசர் ஜோன் போல் தனது 72 ஆவது பிறந்த தினத்தை நேற்று முன்தினம் வத்திக்கான் நகரில் கொண்டாடினார்.

சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் அவ்வேளை அங்கு திரண்டிருந்து அவரை வாழ்த்தினர்.

## சோனியா புகழ்கிறார்

"இந்திரா காந்தி மிகவும் மென்மையான சுபாவம் கொண்டவர், சிலர் கூறுவது போல அவர் கடும் போக்கைக் கையாள்பவர் அல்லர்"

இவ்வாறு சோனியா காந்தி லண்டன் இன்டிபென்டன்ட் இதழுக்கு முதன்முதலாக அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

மேனகா காந்தி இந்திரா காந்தியின் சுபாவம் குறித்து முன்னர் கண்டித்து வந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## காவிரிநீர் பிரச்சினை

"தமிழ் நாட்டுக்கு காவிரி நீர் கொடுக்குமாறு பிரதமர் நரசிம்மராவ் என்னும் சொல்லவில்லை" என்று கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா பிரதமரைச் சந்தித்து விட்டுத் திரும்பியதும் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## உரும்பராய் சைவத்தமிழ் சாதனை

சமீபத்தில் வெளியான க.பொ.த.(சாதாரண)தரம் பரீட்சையில் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவர் திறமை துல்லியமாகப் பளிச்சிட்டுள்ளது.

பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ள அதேவேளை ஓர் மாணவி ஆறு பாடங்களில் விசேட சித்திபெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## 'சோலங்கி மீது வழக்கு தேவை'

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் விசாரணையைத் தாமதப்படுத்தக் கோரிய முன்னாள் மந்திரி மாதவசிங் சோலங்கி மீது வழக்குத் தொடரவேண்டும் என்று லோகசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## ராஜீவ் அனுதாபத்தால் ஜெயித்த எம்.பிக்கள் பதவி விலக வேண்டும்

- சுப்பிரமணியசுவாமி

இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனைக் கைதுசெய்ய இந்திய அரசு தவறினால் ராஜீவ்காந்தி கொலை அனுதாபத்தால் ஜெயித்த தமிழக காங்கிரஸ் எம்.பிக்களை ராஜினாமாச் செய்யச்சொல்லி அவர்கள் தொகுதிகளில் பொதுக்கூட்டங்களை நடத்தப்போவதாக ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் ஜனதாக் கட்சியின் மாநில மாநாட்டுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ் அறிவிப்பை விடுத்தார்.

"ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிவரை இதற்கு அவகாசம் வழங்கப்படும் அதற்குப் பின்னரும், பிரபாகரனைக் கைது செய்யாமலோ, இந்த எம்.பிக்கள் ராஜினாமாச் செய்யாமலோ இருந்தால் நரசிம்மராவ் அரசையும் ராஜினாமாச் செய்யச்சொல்லி ஜனதாக்கட்சி போராட்டங்கள் நடத்தும்" எனவும் அவர் அங்கு அறிவித்துள்ளார்.

இந்த மாநாட்டையொட்டி காஞ்சிபுரத்தில் பல இடங்களில் சுப்பிரமணிய சுவாமி கட் - அவுட்களில் கைகளைக் காட்டியபடி சிரித்துக் கொண்டிருந்தார். இது பற்றி காமெண்ட் அடித்த சுப்பிரமணிய சுவாமி 'இது தமிழ் நாட்டு ஸ்டைல் இங்கு இப்படி போஸ் கொடுத்தால் தான் எடுபடும்' என்றார்.

மாநாட்டு மேடையில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான நாற்காலிகள் தான் போடப்பட்டன எல்லோரும் மேடையில் அமர்ந்த பின்னர் திடீரென கட்சித் தலைவர் ஒருவர் 'பிரமாண்டமான நாற்காலி' ஒன்றை சுப்பிரமணிய சுவாமிக்கு மட்டும் கொண்டு வந்து போட்டார். பின்னர் "இதுவும் தமிழ்நாட்டு ஸ்டைல் தான்" என்று சிரித்துக் கொண்டே அதில் அமர்ந்தார் சுவாமி.

## வற்றாப்பளை சம்பவத்தில் காயமடைந்தோர் விவரம்

நேற்று முன்தினம் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த போது முல்லைத்தீவு இராணுவத்தினர் மேற்கொண்ட செல் தாக்குதலினால் ஸ்தலத்தில் 10 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் 25 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் ஜீவராணி என்ற இரண்டரை வயதுக்குழந்தை பின்னர் மரணமானது.

ஞ. கணேசசுந்தரலேகி (12) உடையார்கட்டு, அ. சத்தியசேகர் (16) புதுக்குடியிருப்பு. க. புனிதா (3) புதுக்குடியிருப்பு. செ. விஜயரத்தினம் (17) மாங்குளம். எ. றெஜித் (27) புதுக்குடியிருப்பு, வி. ஈஸ்வரன் (21) கனகராயன்குளம், க. வடிவேலு 40; கனகராயன்குளம், கா. நித்தியராஜ் (18) புதுக்குடியிருப்பு மதிவதனம் (13) முல்லைத்தீவு. இ. சண்முகதேவி (18) கொக்குவில் கிழக்கு, கணேஸ்வரன்(20) உடையார்கட்டு. கவிதா (8) செம்மலை மணலாறு. திருமதி சிவனேஸ்வரி ஜீவரெட்ணம் (34) மணலாறு சந்திரரூபன் (18) புதுக்குடியிருப்பு. முருகையா (24) உடையார்கட்டு ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 07.47

## லெப். கேணல் ராதாவின் 5 ஆம் ஆண்டு நினைவு தினம்

லெப்டினன்ட் கேணல் ராதாவின் 5 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று 20 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று மாலை ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய முன்றலில் நிலையத்தலைவர் பாலசிங்கம் தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் யோகி, யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம் பரிதி உட்பட பலர் உரையாற்றுவர்.

இறுதியில் கலை பண்பாட்டுக்கழகத்தின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## மிகப் பாதுகாப்பான நீதிமன்றில் ராஜீவ் கொலை வழக்கு

ராஜீவ்காந்தி கொலை வழக்கு பலமான பாதுகாப்பையுடைய பொன்மயிலி மஜிஸ்ரேட் நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலேயே நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சென்னை புறநகர்ப் பகுதியில் பொன்மயிலி பகுதி அமைந்துள்ளது.

பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்பு "தடா"ச் சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்கவென நியமிக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தின் செயற்பாடுகளும் இந்த பொன்மயிலி பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன.

மிகவும் கடுமையான பாதுகாப்புடன் கூடிய சிறைச்சாலைக்கு அருகில் இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைந்திருப்பதனாலேயே இவ்வழக்குகளை விசாரிக்க இது தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

# பழுதடைந்த இறைச்சி, மீன் மாநகரப் பகுதியில் விற்பனை

யாழ். மாநகரப் பிரதேசத்தில் பழுதடைந்த இறைச்சி விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனால் பலர் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அன்றைய இறைச்சியையே இறைச்சிக் கடை உரிமையாளர்கள் விற்பனை செய்ய வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேபோல பழுதடைந்த மீன் விற்கப்படுவதாகவும் இதிலும் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## ★ 5 லட்சம் ரூபா நஷ்ட ஈடு கோரி

# லேக்ஹவுஸ் நிறுவனம் மீது பிரின்ஸ் குணசேகரா வழக்கு

ஹபரதுவ முன்னாள் சுதந்திரக்கட்சி எம். பி.யான பிரின்ஸ் குணசேகர லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்திடமிருந்து 5 லட்சம் ரூபா நஷ்டம் கோரி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

1990 மே 17ஆம் திகதி 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில் வெளிநாட்டு நிதியுதவிகளை பிரின்ஸ் குணசேகரா தனது தேவைக்கு பயன்படுத்தியதாக அமைந்திருப்பதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# மகாராஜா நிறுவனம் பற்றி சபையில் குற்றச்சாட்டு

மகாராஜா நிறுவனம் தீர்வையற்ற அன்ரனாக்களை இறக்குமதி செய்து பொது மக்களுக்கு விற்பனை செய்து பெரும் லாபத்தை ஈட்ட அரசு இடம் கொடுத்துள்ளது இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. பத்திரன குணவர்த்தனா சபையில் நேற்றுக் கூறினார்.

மகாராஜா நிறுவனம் போன்ற சில நிறுவனங்களுக்கு அரசு சலுகை செய்வதாகவும் அவர் கூறினார்.

# ரூபவாஹினி தயாரிப்பாளர் மீது சப் இன்ஸ்பெக்டர் தாக்கு

ரூபவாஹினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவரை சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தாக்கியதாக தகவலுறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க பொலிஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவிடம் முறையிட்டுள்ளார்.

சுகததாஸ விளையாட்டரங்குக்கு அருகில் வைத்து இவர் தாக்கப்பட்டதாக அமைச்சர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அந்த சப் இன்ஸ்பெக்டர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

## ● பாராளுமன்றத்தில் நேற்று

# எதிர்க்கட்சி எம். பிக்களுக்கு ஒதுக்கிய நேரம் போதாது

பாராளுமன்றம் நேற்றுக் கூடியபோது எதிர்க்கட்சியினருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதாது எனக் கூறி சில எதிர்க்கட்சி எம். பிக்கள் தெரிவித்தனர்.

அறுபத்தைந்து சுதந்திரக் கட்சி எம். பிக்களுக்கு மதி ஐந்து நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றது போதாது என நிச்சங்க பத்திரன எம். பி. கூறினார்.

அரசாங்கம் தனது பலவீனத்தை மறைப்பதற்காகவே தமக்குப் போதிய நேரம் தரப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

# செயலக ஜெனரேட்டர் பழுது அரச அதிபர் வந்தபின் திருத்தம்

யாழ். அரச செயலகத்தின் ஜெனரேட்டர் மீண்டும் நேற்று முதல் பழுதடைந்துள்ளது.

இதனால் பிறப்பு இறப்பு பதிவுவேலைகள் உட்பட முக்கிய பகுதிகளின் வேலைகள் பாதிக்கப்பட்டன.

அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து வந்த பின்பே இதன் திருத்த வேலை நடைபெறும் எனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(47)

## கஸ்தூரியின் ஆக்கங்கள்

"கஸ்தூரியின் ஆக்கங்கள்" என்ற நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் வெள்ளி மாலை ஐந்து மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவில் நூலை திருமதி அடேல் பாலசிங்கம் வெளியிட்டு வைப்பார். ஆய்வுரைகளை மகளிர் முன்னணியைச் சேர்ந்த மாலினி, பாரதி மற்றும் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேபி ஆகியோர் நிகழ்த்துவர்.

## விரிகுடாவில் தாழமுக்கம்

வங்காள விரிகுடாவில் வளிமண்டலத் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது வடக்கால நகர்ந்து பங்களாதேஷைத் தாக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## தர்மகர்த்தா சபை உறுப்பினர் கைது

வீரமுனை கண்ணகையம்மன் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவியளித்ததாக குற்றம் சாட்டப்பட்டு அதிரடிப்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

06

### கூட்டுப்படை...

இவருடன் வேறு ஒரு பெண்ணும் இரு இளைஞர்களும் வயோதிபர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### இந்...

மராவ அர்ஜுன் சிங்கையே நியமிக்க கட்சியினுள் சிலர் முயற்சித்தனர் என்பதும் பின்னர் நரசிம்மராவ் கட்சித் தலைவராக, பிரதமராக நிறுத்தப்பட்டார் என்பதும் தெரிந்ததுவே"

### பெண்கள்...

இந்த மூன்று வர்த்தகர்களும் அண்மையில் சென்னை சென்றுள்ளதாகவும் இவர்கள் இன்னமும் கொழும்பு திரும்பவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பலகாலமாக இந்த வர்த்தகர்கள் பாணந்துறை கொம்பனித்தெரு, ஜிந்துப்பிட்டி, மட்டக்குளிய, மருதானை, புறக்கோட்டைப் பகுதிகளிலுள்ள சில்லறை விற்பனையாளர்கள் மூலம் போதைப் பொருளை விற்பனை செய்து வந்தனராம்.

### கிழக்கு...

பாரம்பரிய உடைகள் மற்றும் அம்பு, ஈட்டி, வில் ஆகியவற்றுடனேயே அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர்.

அமைதியான வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்ட தம்மை சர்ச்சைக்குரிய பகுதிகளில் குடியேற்றியமைக்காக அவர்கள் அமைச்சரிடம் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

எனினும் இவர்களின் கோரிக்கைகளை அமைச்சர் ஏற்றுக் கொள்ளவில்லை எனத் தெரிக்கப்படுகிறது.

# முக்கிய பிரமுகர்களுக்கு சுங்கசோதனை சலுகை

சுங்கப் பரிசோதனையின் போது முக்கிய பிரமுகர்களுக்கு சலுகைகள் காட்டப்படுகிறது இவ்வாறு ஐக்கிய சோஷலிச எம். பி. அதாவுட செனிவிரத்ன பாராளுமன்றத்தில் கூறினார்.

அரசாங்க பிரமுகர்களுக்கோ பொதுமக்களுக்கோ சுங்கப் பரிசோதனையின்போது ஒரே கொள்கை கடைப்பிடிக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

# செஞ்சிலுவைத் துணைத்தலைவர் அமைச்சர் சந்திப்பு

ஜெனிவாவுக்கு விஜயம் செய்த வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்க துணைத்தலைவருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் பகுதிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும் அமைச்சர் உரையாடினார்.

# கிராமங்கள் தோறும் காப்புறுதி வேலைகள்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கிராமப் புறங்களில் அதன் நடவடிக்கைகளை விஸ்தரிக்கவுள்ளது.

இதன்படி காப்புறுதி அபிவிருத்தி அலுவலகங்கள் கிராமங்கள் தோறும் திறக்கப்படவுள்ளன.

கிராமங்கள் நகரப்பகுதிக்கு வந்து போகும் கஷ்டத்தை நீக்கவே இத்திட்டம் அமுலாகிறது.

# திட்டமிடாமல் நிதியமைச்சு செயற்படுகின்றது -லக்ஷ்மன்

நாட்டின் நிதி எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதில் அரசுக்கு நிலையான விவரங்கள் இல்லை எனச் சபையில் கூறினார் சுதந்திரக்கட்சி எம். பியான லக்ஷ்மன் ஜயக்கொடி.

மத்திய வங்கியின் ஆளுநர் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை பிழை என்கிறார். கணக்காய்வாளர் தனது அறிக்கைசரியானதுஎன்கிறார்.

நிதியமைச்சு மத்திய வங்கியின் அறிக்கை சரியானது எனக் கூறுகிறது. இதனால் நிதியமைச்சு திட்டமிடாமல் செயற்படுகிறது என்றும் அவர் கூறினார்.

# சோவியத் போர்க்கைதியை ஆப்கானிஸ்தான் விடுவித்தது

தற்போதைய ஆப்கான் ஆட்சியாளர்கள் சோவியத் போர்க்கைதி ஒருவரை விடுவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன்களிடம் போர்க்கைதியாக கடந்த நான்கு ஆண்டுகள் சிறைப்பட்டிருந்த ஒரு சோவியத் இளைஞர் நேற்று காபூல் நகரத்தில் சோவியத் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இருபத்து நான்கு வயதினரான இந்த சோவியத் இளைஞர் தன்னைச் சிறைப்பிடித்தவர்கள் சகோதரர்களாகப் பாவித்து உதவி பாராட்டியதாகக் கூறினார்.

இவர் சிறைக்கைதியாக இருந்த காலத்தில் முஸ்லிம் ஆக மாறினார் தனது பெயரையும் அகமெட் என்று மாற்றிக் கொண்டார்.

இன்னும் சில சோவியத் வீரர்களை கைதியாக ஆப்கானில் விட்டுச் செல்வது வருத்தமாக இருக்கிறது என்றும் கூறினார்.

# செஞ்சிலுவை ஊழியர் பொஸ்னியாவில் பலி

பொஸ்னியாவில் செஞ்சிலுவைச் சங்க ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு இறந்துள்ளார்.

பொஸ்னியாவில் நடக்கும் போரில் உதவி செய்யச் செல்பவர்கள் கொல்லப்படுவது என்பது தொடர் கதையாகி விட்டது.

முன்பு ஐரோப்பிய சமுதாய போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் பலியானார்கள். இப்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

தற்போது இறந்த செஞ்சிலுவைச் சங்க ஊழியர் சுவிஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவர் பொஸ்னியாவுக்கு வந்த அன்றே தாக்கப்பட்டு காயமடைந்தார். நேற்றுக்காலை மருத்துவமனையில் அவர் காலமானார்.

பொஸ்னியநாட்டு மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை லொறியில் ஏற்றி கொண்டு செல்லும் போதே அவர் தாக்கப்பட்டார்.

## மொழிபெயர்ப்பு

வறுமை நிவாரண ஆணையாளர் பணிமனையினால் பாவிக்கப்படும் கடிதத் தலைப்பு மூம் மொழிகளிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

புனர்நிர்மாண, புனர்வாழ்வும், சமூக நலன்புரி அமைச்சு என்று அச்சிடப்பட வேண்டியதை பிரதிசங்கிரன புனருத்தாபன ஆ சமாஜ சுபசாதன அமர்த்தியஞ்சே என அக்கடிதத் தலைப்பில் அச்சிடப்பட்டுள்ளது.

25

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்திலுள்ள அச்சகத்தில் 20-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது